State Officials' visit to Japan

* 98. Q.—Thiru K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any team of State Officials visited Japan about August 1971;

(b) if so, the details thereof; and

(c) the number of times such teams have visited foreign countries from 1967 onwards?

ஜப்பான் நாட்டுக்கு சென்று வந்த மாநில அரசு அதிகாரிகள் குழு

திரு கே. ராஜாராம் (திரு. வெ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) மாநில அரசு அதிகாரிகள் குழு ஏதேனும் 1971 ஆகஸ்ட் மாதத்தில் ஜப்பான் நாட்டுக்குச் சென்று வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அத்தகைய குழுக்கள் 1967 ஆம் ஆண்டு முதல் எத்தனை தடவை வெளி நாடுகளுக்குச் சென்று வந்துள்ளன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தொழில் அமைச்சர் தலைமையில் ஒரு குழுவினர் 1971 ஆகஸ்டில் ஜப்பானுக்குச் சென்று வந்தனர். அப்போது மிட்சுபி டோயோ இன்ஜினியரிங் கார்ப்பொரேஷன், இசேகி விசை உழவுக் கருவிகள் நிறுவனம், ஜூஜோ பேப்பர் கம்பெனி, தோஷிபா டிரான்ஸிஸ்டர்ஸ், மத்தியக் கண்ணாடி நிறுவனம், ஐ.எச்.ஐ. கம்பெனி, ரிக்கன் பிஸ்டன் ரிங்ஸ் போன்ற பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். (Weedilcide) கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரித்தல், சோடா உப்பு அம்மோனியம் குளோரைடு, சோடியம் ஹைடிரோ சல்பைட், பிஸ்டன் வளையங்கள், விசை உழவுக்கருவிகள் ஆகியவை தயாரித்தல் மற்றும் உப்புநீரை குடிநீராக மாற்றும் இயந்திர தளவாடங்கள் மின்கருவிகள் நிறுவுதல், மை படியாக் காகிதங்கள் தயாரித்தல் போன்றவை தொடர்பாகவும் பேச்சு வார்த்தை நடைபெற்றது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும்,

1972 ஆகஸ்ட் 19]

வேளாண் தொழில் கழகமும் இது தொடர்பாக மேலும் தொடர்ந்து எந்த முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி ஆய்வு செய்து வருகின்றன.

(உ) ஒரே ஒரு முறை.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவர் அவர்களே, இன்று ஹிந்துப் பத்திரிகையில் ஜப்பான் தொழில் அதிபர்கள் நம்முடைய தேசத்திற்கு வந்து இங்கே தொழில் செய்வதற்கு மிகவும் தயங்குவதாக ஒரு கட்டுரை வந்திருக்கிறது. தொழில் அமைச்சரவர்கள் போயிருந்த சமயத்திலே இது சம்பந்தமாக அங்கே என்ன அபிப்பிராயம் நிலவுகிறதைக் கண்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நாங்கள் அறிந்தமட்டிலே, நம்முடைய இந்தியத் தூதுவர் அவர்கள் இந்த ஏற்பாடுகளைச் செய்தார்கள். அவர்கள் கூறிய தகவல் : ஜப்பான் நிபுணர்கள் இந்திய நாட்டுக்கு வந்து இங்கே என்னென்ன தொழில்கள் தொடங்க முடியும் என்பதை ஆராய்ச்சி செய்து ஒரு அறிக்கையை மத்திய அரசுக்கு அனுப்புவதாகவும், அதிலே இந்திய நாட்டிலே ஜப்பானியர்கள் அதிகமாகத் தொழில் தொடங்குவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும், இங்கேதான் குறைந்த அளவு ஊதியம் உள்ள அதிகத் திறமை வாய்ந்த 'ஸ்கில்ட் லேபர்' இருக்கிறார்கள், அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஜப்பானிய அரசுக்கு அந்தக் குழு யோசனை சொல்லியிருப்பதாகவும், அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டில் இந்த வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும் அந்த நிபுணர்கள் சொன்னதாக என்னிடத்தில் சொன்னார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் ஜப்பானுக்குப் போய்ப்பார்த்து வந்ததிலிருந்து எந்தெந்தத் தொழில்களைத் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கலாம், அப்படி ஆரம்பிப்பதற்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை ஆராய்ச்சி செய்து, அரசாங்கம் ஏதாவது முடிவுக்கு இதுவரை வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பொதுவாக இருக்கிறது. ஆகவேதான் பல திட்டங்களைப் பற்றிச் சொன்னேன். குறிப்பாக அவர்கள் இங்கு வந்து நமக்கு

உதவி செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இருப்பதை நாம் பார்க்கின்ருேம். பல நிறுவனங்கள், அங்கே தொடர்பு கொண்ட நிறுவனங்கள் இங்கே மீண்டும் வந்து, அந்தத் தொடர்பை வலுப்படுத்த, பேச்சு வார்த்தை நடத்தும் வாய்ப்பைப் பார்க்கின்ருேம். உதாரணமாக நாம் தூத்துக்குடியில் 71 கோடி ரூபாயில் தொடங்க இருக்கும் உரத் தொழிற்சாலை (Tuticorin Fertilizer Project அதற்கு அந்த ஜப்பானியக் கம்பெனிகள் உதவி செய்ய ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். ஹெவி வாட்டர் பிளேன்ட்டிலே அவர்கள் அக்கறை காட்டுகிருர்கள். ஆமோனியம் குளோரைடு, சோடா ஆசிட் திட்டம், நம் அரசாங்கம் அனுமதி பெற்று, இந்தத் தூத்துக் குடி உரத் தொழிற்சாலையோடு இணைந்து செயல்படும் ஒரு திட்டம். அந்தத் திட்டத்துக்கும் அவர்கள் உதவி செய்வதாக ஒப்புக்கொண் டிருக்கிருர்கள். திருவண்ணுமலைக்குப் பக்கத்தில் உள்ள கனி வளங்களை ஆராய்ச்சி செய்து அவற்றை எப்படி உபயோகப்படுத்த லாம் என்று ஜப்பானிய நிபுணர்களோடு பேச்சு நடத்தி, அவர் களும் அண்மையிலே இங்கு வந்து ஒரு அறிக்கை தந்திருக்கிருர் கள். இந்த அறிக்கையின்படி, 35 லட்சம் ரூபாய்த் திட்டம் வகுத்து, திருவண்ணுமலையில் இந்த இரும்புத் தாதுவைப் பொடி யாக்கி, அதை இரும்பு ஆலைகளில்—'ஸ்டீல் பேக்டரீஸ்'—பயன் படுத்த முடியும் என்ற குறிப்பை நம்மிடத்திலே கொடுத்திருக்கிருர் கள். 'டிசேலினேஷன்' பிளேன்டைப் பற்றியும் அவர்கள் அறிக்கை தந்திருக்கிருர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டுக்குச் சென்று ஆய்வு செய்து வந்த குழு கொடுத்த அறிக்கையில் உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக மாற்றுகிற திட்டமும் இருப்பதாகக் கூறப்பட்டது. அதையும் குடி தண்ணீர் வாரியம் மேற்கொண்டு, எல்லாப் பகுதிகளிலும் நல்ல குடி தண்ணீர் கொடுக்க, பயன்படுத்துவதற்கு ஏதாவது **தனித்** திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கடைசியாக அதைப்பற்றித் தான் சொன்னேன்—'டிசேலினேஷன் பிளேன்ட்' என்று. அதற்கு அவர்கள் ஆராய்ச்சி செய்து ஒரு அறிக்கையும் தந்திருக்கிருர்கள். அதிலுள்ள சங்கடம் எல்லாம் நம்முடைய தமிழ் நாட்டில் கிடைக்கக்கூடிய தண்ணீருக்கு—அது

1972 ஆகஸ்ட் 19]

குடி தண்ணீராக இருந்தாலும் சரி, வேறு தொழில் உபயோகத்திற்காக இருந்தாலும் சரி—இப்போது நாம் எந்த விலை கொடுக்கிறோமோ அதைவிட அதிகமாக ஆவதால்தான் தயக்கம் காட்டப்படுகிறது.

Sculpture Training

*99. *Q.*—THIRU SAW. GANESAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken by the Government for the provision of employment opportunities to the students who have undergone training in sculpture at Mamallapuram;

(*b*) whether the Government will come forward to pass orders to the effect, that their 'Certificate' qualification will be equal to the 'Diploma' qualification; and

(*c*) the steps taken by the Government to show them concessions regarding employment in Temples and Public Works Department?

சிற்பத் துறைப் பயிற்சி

திரு. சா. கணேசன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாமல்லபுரத்து சிற்பத் துறைப் பயிற்சி பெற்ற மாணக்கர்கட்கு வேலை வாய்ப்பிற்கு அரசு என்ன செய்து இருக்கிறது ?

(இ) அவர்களின் 'சர்டிபிகேட்' தகுதியை 'டிப்ளமோ' தகுதிக்கு நிகர் என ஆணையிட அரசு முன்வருமா ?

(உ) கோயில்கள், பொதுப்பணித்துறை வேலைகளில் இவர்கட்கு சலுகை கிடைக்கச் செய்ய அரசு என்ன ஏற்பாட்டை செய்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மாமல்லபுரம் சிற்பப் பயிற்சிக் கூடத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் கோயில்களிலும் பிற இடங்களிலும் கல் சிற்பங்கள் செய்யும் பணிபுரிந்து வருகிறார்கள். உதாரணமாக, கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபம் நிறுவுதலில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். இப்பொழுது பூம்புகார் கலைக்கூடம் அமைப்பதில் அப்பயிற்சியாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். மேலும், பயிற்சி